30th September 1958]

Lower Bhavani ayacutdars

* 34 *S.N.Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have given instructions to the Revenue Officials in Coimbatore district to stay the collections of penalties imposed on the Lower Bhavani ayacutdars; and

(*b*) the steps taken by the officials to investigate into the grievances of the ryots in the area referred to in clause (*a*)?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Remission of penalties in deserving cases is granted by the Special Deputy Tahsildars themselves and stay of collection of penalty is granted liberally by the Revenue Divisional Officers on appeals.

Sri N. K. PALANISAMI: கசிவு உள்ள இடங்களில் நெல் வைத்ததன் காரணமாக கசிவு இல்லாத இடங்களிலும் நெல் வைத்தி திருப்பதாகக் கருதி தண்ட வரி போடுவதால் விவசாயிகள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். கசிவா, கசிவு இல்லையா என்று பார்த்து, கசிவு உள்ள இடங்களில் வரி ரெமிஷன் பண்ணுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி நீர்க்கசிவு இருந்தால் தண்ட வரி எடுத்துவிடுகிறார்கள்.

National Extension Service Block in Paramakudi

* 631*Q.*—Sri M. JAGANNATHAN (on behalf of Sri K. Ramachandran): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total amount spent up to 31st March 1958, in Paramakudi in the National Extension Service Block in Ramanathapuram district; and

(*b*) the details of the works executed up to 31st March 1958?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) A sum of Rs. 84,142 (including loan and non-loan expenditure) has been spent in Paramakudi Block up to 31st March 1958.

(*b*) Platforms to drinking water wells at Nariyila, Pamboor, Keelaparthibanur, Pulikulam and Marichikatti were constructed. The Manjalpattinam and Pamboor approach roads were gravelled.

Poormen depots

* 632 *Q.*—Sri N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) what happened to the money collected from the public by Collectors and Tahsildars during 1946–47 to open 'Poormen Depots' for the benefit of poorer sections of the people after the closure of these depots;

(*b*) with whom the money so collected at Uthamapalayam, Madurai district, in respect of 'poormen depots' was deposited; and

[30th September 1958

(*c*) the steps taken by the Government to collect the money thus deposited?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Funds for opening Poormen depots were collected by non-official committees of local people. No money was collected from the public by Collectors or Tahsildars to open poormen depots, *except in* Coimbatore district where in one taluk, viz., Dharapuram, the Tahsildar had raised public contribution for the purpose, out of which a balance of Rs. 106·81 nP., is still available with interest.

(*b*) The balance amount of Rs. 3,007–8–2 with interest of Rs. 28 was drawn from the Urban Bank, Uthamapalayam, and was handed over to Sri S. Thiagaraja Mudaliar, one of the members of the Committee for utilizing it for a building of the Board High School, Uthamapalayam, as per resolution, dated 29th June 1947, of the Committee.

(*c*) Does not arise in view of the answer to (*b*) above.

SRI N. R. THIAGARAJAN : நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது, போர்டு ஹைஸ்கூல் கட்டிடம் கட்டுவதற்காக அந்தப் பணத்தைக் கொடுக்கும்படி அவர்களைக் கேட்டதற்கு, அத்தகைய பணம் தங்களிடம் இல்லை என்று அவர்கள் கூறிவிட்டார்கள். அதற்கு முன்பே பல முறை பொதுமக்கள் கேட்டும், பணத்தைச் சரியான முறையில் உபயோகம் செய்யவில்லை. போர்டு ஹைஸ்கூலுக்கென சேர்கிய நிதியை ஜில்லா போர்டு வசம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்கூல் விவகாரத்தைப் பற்றித் தனியாக கனம் கல்வி அமைச்சருக்கு கேள்வி போட்டால் அதற்கு அவர் பதிலளிக்கலாம்.

Villages without Schools in Coimbatore District.

9–10 a.m. * 633 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்கள் எத்தனை ?

(ஆ) இக் கிராமங்களிலே கல்வி கற்கத் தகுந்த வயதடைந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no village in Coimbatore District with a population of 500 and above in which there is no school.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : அநேகமாக, 500-க்குள் குறைவான ஜனத்தொகையுள்ள கிராமங்களில்தான் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படவில்லை. அந்த கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு சிறிய ஊரிலும் பள்ளிக்கூடம் அமைத்தால், அவைகளுக்கு அங்காங்கே போதிய மாணவர்கள் இருக்கமாட்டார்கள். பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை அமைத்தால், அவைகளுக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள பிள்ளைகளும் அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் போகமுடியும். எனவே பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டுமென்று சர்க்கார்